கனம் திரு. பூ. கக்கன் : நான் முதலில் சொன்ன பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் கேட்டிருக்கிறார்களா என்பது கேள்வி. நான், இல்லை என்று சொன்னேன். சில இடங்களில் உள்ள கிணறுகளைப் பரிசீலனை செய்து பார்த்து சமுதாயப் பொதுக்கிணறுகளாக அவற்றை வெட்டி பம்பு செட்டு இணைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : ஆர்ட்டீஷியன் வெல்ஸ் என்று சொல்லக் கூடிய குமிழிக் கிணறுகள் எந்த முறையில் அமைக்கப்பட்டன? இயற்கையாக ஊற்று உள்ள இடத்தில் அந்த ஊற்றுக்கண் திறந்திருக்கும்படியாக அமைப்பது தான் முறை. இங்கே குழாய்கள் அமைக்கும்போது கீழோ, மேலோ ஊற்றுக்கண் மூடிக்கொள்ளும்படி. அமைத்துவிட்டார்களா? அதைப் பரிசீலனை செய்தார்களா? அந்தப் பரிசிலனையினால் கிடைத்த முடிவு என்ன, நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : குறிப்பாக நெய்வேலி வட்டாரத்தில் தானாக ஊற்று வந்துகொண்டிருந்தது. அதை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். மெஷின் வைத்து இறைப்பதன் மூலம் தண்ணீர் ஆழத்தில் இறங்கிவிட்டது. ஆகவே, பம்பு செட்டு வைத்து இறைத்துப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சமுதாயக் கிணறுகள் எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். சமுதாயக் கிணறுகள் எடுக்கவேண்டும் என்பதாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இது வரைக்கும் எந்தக் கிணறும் தோண்டப்படவில்லை. சமுதாய நலக் கிணறுகள் தோண்ட இனியாகிலும் அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் சபாநாயகர் : யாருக்கு அனுப்பியிருக்கிறார்கள்? அக்ரிகல்சர் டிபார்ட்மெண்டுக்கா?

திரு. கரு. சீமைச்சாமி : ஆமாம்.

கனம் திரு. பூ. கக்கன் : சமுதாயக் கிணறுகள் வெட்ட வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அதைத்தான் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அப்படித் தோண்டுவதாக இருந்தால் பஞ்சாயத்தோ, சொஸைட்டியோ முன் வந்து பொறுப்பை ஏற்பதாக இருந்தால், நல்ல நீர் ஊற்று உள்ள இடங்களில் ஏற்படுத்தலாம்.

‘ஹோல்ஸ்வொர்த்’ அணை

* 365 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள “ஹோல்ஸ்வொர்த்” அணையில் 1965 டிசம்பரில் பெய்த பெரு மழையின் காரணமாக

3rd November 1966]

உடைப்பு எடுத்தது பற்றி பொது மக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்தனவா?

கனம் திரு. பூ. கக்கன் : நீர் வரவுகால்களில் ஏற்பட்ட உடைப்புகள் சம்பந்தமாக, திருச்சிராப்பள்ளி கோட்ட நிர்வாகப் பொறியாளருக்கு ஒரு முறையீடு வந்தது. உடைப்புகளை அடைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

திரு. பி. முருகையன் : அந்தப் பகுதியில் இருக்கிற பொது மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிற நோக்கில் அதிகாரிகளுடைய கவனக் குறைவினுல்தான் உடைப்பு ஏற்பட்டது என்று சொல்கிருர்கள். இனிமேலாவது இத்தகைய உடைப்புகள் ஏற்படாமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அணையில் உடைப்பு ஏற்படவில்லை. அணையில் இருந்து போகிற வாய்க்கால்களில்தான் உடைப்பு. அதையும் செப்பனிட்டுவிட்டார்கள்.

திரு. பி. முருகையன் : அணைக்குப் பக்கத்தில்தான் உடைப்பு, அணையின் சிமிண்டு கட்டுகளை எல்லாம் உடைத்துக்கொண்டுபோய் இருக்கிறது. இனிமேலாவது அதிகாரிகளுடைய கவனக் குறைவினுல் இத்தகைய அசம்பாவிதம் ஏற்படாதிருக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அணையில் உடைப்பு எதுவும் இல்லை. வாய்க்கால்களில் தான் உடைப்பு.

திரு. கரு. சீமைச்சாமி : அணையில் லேசாக உடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிருர்.

கனம் திரு. பூ. கக்கன் : அணை லேசாகவும் உடையவில்லை. பலமாகவும் உடையவில்லை. (சிரிப்பு)

போலீஸ்

*366 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், போலீஸ் படையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : (a) No.

(b) Does not arise.

திரு. கரு. சீமைச்சாமி : தமிழ்நாட்டில் உள்ள போலீஸ் படையின் எண்ணிக்கைக்கும் ஜனத்தொகையின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாச்சாரம் என்ன என்று அறியலாமா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விகிதாச்சாரம் பற்றிய தகவல் என்னிடம் இல்லை.